# சிங்கப்பூர் விலங்கியல் தோட்டத்திற்கு அஆ...உஊ கற்றல் பயணம்

கீழ் தொடக்கநிலைக்கான கற்றல் பயணம்



## ஆசிரியர்களுக்கான வழிகாட்டிக் கையேடு

விலங்கியல் தோட்டத்திற்கு வருகை புரிவதற்கு முன்பாகவும், விலங்கியல் தோட்டத்திற்கு வந்த பின்னரும், விலங்கியல் தோட்டத்திற்கு வருகை புரிந்துசென்ற பின்னரும், பிள்ளைகளுக்கு எத்தகைய நடவடிக்கைகளை நடத்தலாம் என்பது பற்றியும், இந்த நடவடிக்கைகளின் வழி பிள்ளைகளை அன்றாட வாழ்க்கையில் தமிழ் மொழியைப் பயன்படுத்துவதற்கு எவ்வாறு ஊக்குவிப்பது என்பது பற்றியும், இந்தப் பயணக் கையேட்டின் மூலமாக தெரிந்து கொள்ளலாம். சிங்கப்பூர் விலங்கியல் தோட்டத்தில் இருக்கும் நீர்க்கீரி, யானை மற்றும் புலி ஆகிய விலங்குகளைப் பற்றி மேலும் அறிந்துகொள்வதன் மூலம் தமிழில் அவர்கள் பயிற்சி எடுத்துக்கொள்ள இயலும். இந்த கற்றல் வளங்களில், விலங்குகளைச் சார்ந்த விளையாட்டுகளுடன், மொழித்திறன்களான கேட்டல், எழுதுதல், பேசுதல் மற்றும் கூர்ந்து கவனித்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன.

கீழ் தொடக்கநிலை மற்றும் மேல் தொடக்கநிலை மாணவர்களுக்கென வரையறுக்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ள பாடத்திட்டங்களை உங்களுடைய மாணவர்களின் கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கலந்தோ அல்லது ஒன்றை மற்றொன்றுடன் மாற்றியோ உங்களது விருப்பப்படி பாடத்திட்டங்களை வடிவமைத்துக் கொள்ளலாம். வழிகாட்டியில் பரிந்துரைக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை, வகுப்பறையிலோ நமது விலங்கியல் தோட்டத்திலோ மேற்கொள்ளலாம்.

© Singapore Zoo 2020

# கற்றல் பயணத்திற்கு முன்பான நடவடிக்கைகள்



## பாடத்திற்கான யோசனை 1: நீர்க்கீரிகளைப் பார்வையிடுவது

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 1 - 2**

**திறன்கள்: • பேசுதல் • சீர்தூக்கிப் பார்த்தல் • கூர்ந்து கவனித்தல்**

### நான் யார்?

படங்களை உள்ளடக்கிய கற்றல் வளக் கையேட்டில் உள்ள கீரிப்பூனை, கடற்சிங்கம் மற்றும் நீர்க்கீரி ஆகிய மூன்று விலங்குகளின் நிழல்களையும் மாணவர்களை கூர்ந்து கவனிக்கச் சொல்லுங்கள்.



கூர்ந்து கவனிக்கும் திறனையும், ஆழமான சிந்தனைத் திறனையும் மேம்படுத்த ஆசிரியர்கள் இக்கேள்விகளைப் பயன்படுத்த விரும்பலாம்.

- மூன்று படங்களிலும் நீங்கள் காணக்கூடிய சில ஒற்றுமைகள் என்ன?
- நீங்கள் காணக்கூடிய சில வேற்றுமைகள் என்ன?
- இந்த படங்களில் காணப்படும் நிழல்கள் எந்த மிருகங்களுக்குச் சொந்தமானவை என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

உங்களுடைய வகுப்பு மாணவர்களுக்கு, நீங்கள் கவனித்தவற்றில் சிலவற்றை நீங்கள் மாதிரியாகப் பயன்படுத்த விரும்பலாம். ‘இந்த நிழல் நேராக நின்றுகொண்டிருக்கின்றது, மாறாக இந்த நிழல் அவ்வாறு இல்லை’ அல்லது ‘இந்த விலங்குக்கு இன்னும் கூர்மையான வாய் உள்ளது’.

மாணவர்களின் சொல்வளத்தை விரிவுபடுத்த அவர்களிடமிருந்தே கேள்விக்கான பதில்களை கேட்டறியுங்கள்.

© Singapore Zoo 2020







© Singapore Zoo 2020

## பாடத்திற்கான யோசனை 2: நீர்க்கீரிகளைப் பார்வையிடுவது



**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 2 - 3**
**திறன்கள்: • கூர்ந்து கவனித்தல்**

### நீர்க்கீரிகளைப் பார்வையிடுவது

இரண்டு நீர்க்கீரிகள் ஒரு பையுடன் விளையாடுவதைப் போலக் காட்டும் இக்காணொளியைப் பாருங்கள். நீங்கள் பயன்படுத்தக்கூடிய சில கேள்விகள்

- நீர்க்கீரிகளின் கண்காட்சியை நீங்கள் எவ்வாறு வர்ணிப்பீர்கள்?
- நீர்க்கீரிகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன?
- பையில் என்ன உள்ளது என்று நினைக்கிறீர்கள்? பை எதற்காகப் பயன்படுகிறது என்பதை மாணவர்களிடம் கூறுவதற்கு முன்பாக, பைக்குள் உள்ளவற்றை பற்றி அவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

நமது நீர்கீரிகளைச் சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவும் செறிவூட்டும் விளையாட்டுப் பொருள்தான் இப்பை. காட்டில் வாழ்ந்தால் நீர்க்கீரிகள் எவ்வாறு சுறுசுறுப்பாக தனக்கான இரையைத் தேடிச் செல்லுமோ, அதைப் போலவே அவை இங்கும் இருப்பதை ஊக்குவிக்கும் வண்ணம் இப்பையில் மீன் மற்றும் பிற உணவு வகைகள் சேர்க்கப்பட்டுள்ளன.

© Singapore Zoo 2020

# கற்றல் பயணத்திற்கு முன்பான நடவடிக்கைகள்



## பாடத்திற்கான யோசனை 3: வாசகர்களின் மேடை நாடகம்

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 1 - 2**
**திறன்கள்: • கேட்டல் • கருத்தறிதல் • நாடக வடிவமாக்குதல்**

- யானையின் புகைப்படத்தை மாணவர்களை கூர்ந்து கவனிக்க வையுங்கள். யானையை வர்ணிக்க அவர்கள் பயன்படுத்தக்கூடிய சொற்களைப் பட்டியலிடுமாறு உங்களுடைய மாணவர்களிடம் நீங்கள் கேட்கலாம்.
- கண்பார்வையற்ற மனிதர்களும் யானையும் என்ற கதையை நீங்கள் உரக்க வாசிக்க, தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் நடிப்பதற்கான பாத்திரங்களை ஏற்றுக்கொண்டு நடிக்கும் வண்ணம் வாசகர்களின் மேடை நாடகம் ஒன்றை நடத்துங்கள். *(பின்னிணைப்பு A)*
- ஒரு கதாபாத்திரம் பேச முன்வரும்போதெல்லாம், அப்பாத்திரத்தை ஏற்று நடிக்கும் மாணவர் ஒரு குறிப்பிட்ட வாக்கியத்தை உங்களுக்குப் பின்னர் மறுபடியும் கூறுமாறு ஊக்குவியுங்கள்.

கதையின் நீதியை நீங்கள் பகிர்ந்துகொள்வதற்கு முன்பாக, நீங்கள் இக்கேள்விகளை மாணவர்களிடம் கேட்கலாம்:

- புத்திசாலியான மனிதர், கண் பார்வையற்ற மனிதர்கள் அனைவரும் கூறியது சரி என்று ஏன் கூறினார்?
- இக்கதை நமக்கு கூற வரும் செய்தி என்ன என்று நினைக்கிறீர்கள்?

© Singapore Zoo 2020



© Singapore Zoo 2020



## பாடத்திற்கான யோசனை 4: பார், நினை, சிந்தி

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 1 - 3**
**திறன்கள்: • பேசுதல் • ஆழமாக சிந்தித்தல் • நகல் எழுதுதல்**

- குறைந்தது 30 வினாடிகளுக்கு அமைதியாக, வெள்ளைப் புலி ஒன்றின் புகைப்படத்தை மாணவர்கள் கூர்ந்து கவனிக்கும்படி வையுங்கள்.

- பார்-நினை-சிந்தி என்ற சிந்தனை வழக்கத்தை, சிந்தனையைத் தூண்டும் பரிந்துரைக்கப்பட்ட இக்கேள்விகளின் வழி உங்களுடைய மாணவர்களுடன் பயிற்சி செய்யுங்கள்:

### பார்
– நீங்கள் அடையாளம் காண இயலும் உடற்பாகங்களின் பெயர்களைக் கூறுங்கள்
– இந்த புகைப்படத்தில் இருக்கும் புலியை நீங்கள் எவ்வாறு வர்ணிப்பீர்கள்? ஒரு வகுப்பாக, நாம் பத்து சொற்களைச் சேர்ந்து பட்டியலிடலாம்.

### நினை
– அந்த புலி எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று நீ நினைக்கிறாய்?
– புலி மீது உள்ள வரிக்கோடுகள், உயரமான புற்களுக்கு இடையே அது நன்றாக ஒளிந்துகொள்ள உதவுகின்றது. புலிக்கு, இது ஏன் முக்கியமாக இருக்கும் என்று நீ நினைக்கிறாய்?

### சிந்தி
– புலி இரவில் எவ்வாறு உறங்கும் என்று நான் சிந்திக்கிறேன்
– ஒவ்வொரு புலி மீது இருக்கும் வரிக்கோடுகள் வித்தியாசமானவையா என்று நான் சிந்திக்கிறேன்
– புலி தனது இரையை எவ்வாறு பிடிக்கிறது என்று நான் சிந்திக்கிறேன்.

© Singapore Zoo 2020



# கற்றல் பயணத்தின்போது மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்



# சிறிய நகமுடைய ஆசியாவின் நீர்க்கீரி

## பாடத்திற்கான யோசனை 1: உறைந்துபோன படம்

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 1 - 3**

**திறன்கள்: • கூர்ந்து கவனித்தல் • வெவ்வேறு பொருட்களை அடையாளம் கண்டு கொண்டு வேறுபடுத்தும் திறன் • பேசுதல்**

- கண்காட்சியில் இடம்பெற்றிருக்கும் நீர்க்கீரிகளைக் கவனியுங்கள் அல்லது இந்தக் காணொளியைப் பள்ளியில் பாருங்கள். நீர்க்கீரிகள் மற்றும் அவற்றின் சுற்றுச்சூழலைப் பிரதிபலிக்கும் வண்ணம், மாணவர்கள் சிறிய குழுக்களில் 'உறைந்துபோன படம்' ஒன்றையோ அல்லது ஒரு அசையா காட்சியமைப்பையோ உருவாக்கச் செய்யுங்கள்.

- ஒவ்வொரு குழுவும், அவர்களின் 'உறைந்துபோன' படத்தை வகுப்பின் முன்பாக படைக்குமாறு கூறுங்கள். சில மாணவர்களை அழைத்து, அவர்கள் என்ன சிந்திக்கிறார்கள் அல்லது எவ்வாறு உணர்கிறார்கள் என்பதை முழுமையான வாக்கியமாக கூறச் சொல்லுங்கள் எ.கா. தன்னுடைய வாயைத் திறந்துகொண்டு நிற்கும் ஒரு மாணவன் இவ்வாறு கூறக்கூடும், 'எனக்கு தாகமாக இருப்பதால் குடிப்பதற்காக நான் கொஞ்சம் தண்ணீரைத் தேடவேண்டும் என்று நினைக்கிறேன்'

© Singapore Zoo 2020

# கற்றல் பயணத்தின்போது மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்



## பாடத்திற்கான யோசனை 2: என்ன சத்தம் அது?

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 1 - 2**

**திறன்கள்: • வெவ்வேறு ஒலிகளைக் கேட்டறியும் திறன் • பேசுதல்**

- நீர்க்கீரி கண்காட்சியின் ஒரு பக்கத்தில் மாணவர்களைத் திரள சொல்லுங்கள், அல்லது இந்த காணொளியைப் பாருங்கள். ஒரு நிமிடத்திற்கு தங்களுடைய கண்களை மூடியபடி, மாணவர்களிடம் தங்களைச் சுற்றி எழும் ஒலிகளை உன்னிப்பாக கேட்கச் சொல்லுங்கள்.

- ஒரு நிமிடம் முடிவடையும்போது, அவர்கள் கேட்ட ஒலிகளை அடையாளம் கண்டுகொண்டு அவற்றைக் குறித்து பகிர்ந்துகொள்ள மாணவர்களை ஊக்குவியுங்கள் எ.கா, பறவைகள் கூச்சலிடுவது, நீரோடும் சத்தம், நீர்க்கீரிகளால் தண்ணீர் தெறிக்கும் சத்தம், நீர்க்கீரிகள் கூச்சலிடுவது, மனிதர்களின் காலடி சத்தம். உங்களுடைய மாணவர்கள் முழுமையான வாக்கியங்களில் பேசுவதை ஊக்குவியுங்கள். எ.கா,
    - எனக்குப் பறவைகளின் கூச்சல் கேட்கிறது.
    - எனக்குத் தண்ணீர் தெறிக்கும் சத்தம் கேட்கிறது.

- மாறாக, மாணவர்கள் ஒவ்வொருவராக முன்வந்து அவர்கள் கேட்ட ஒலிகளைத் தங்கள் குரல் வழியாக நடித்துக்காட்ட ஊக்குவியுங்கள்.

© Singapore Zoo 2020

# கற்றல் பயணத்தின்போது மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்



## பாடத்திற்கான யோசனை 3: உற்று நோக்குதல்

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 1 - 2**

**திறன்கள்: • மொழி • கூர்ந்து கவனித்தல் மற்றும் வர்ணித்தல்**

### ஐ-ஸ்பை

நீர்க்கீரிகளின் கண்காட்சியிலோ, நீர்க்கீரியின் புகைப்படத்தின் துணையுடனோ 'ஐ-ஸ்பை' விளையாட்டினை மாணவர்கள் விளையாட அவர்களை ஊக்குவியுங்கள்.

சிறு குழுக்களில், பின்வரும் வாக்கியத்தை நிறைவுசெய்ய உதவும் வண்ணம், கண்காட்சியில் உள்ள ஒரு பொருளையோ, நீர்க்கீரியின் ஒரு உடல் பாகத்தையோ மாணவர்களைத் தேர்ந்தெடுக்கச் சொல்லுங்கள். 'எனது சிறு கண்களால் நான் ஒன்றைப் பார்க்கிறேன்...' எ.கா.

- க என்ற எழுத்தில் தொடங்கும் ஒன்று
- பச்சை நிறத்தில் இருக்குமொன்று
- வாலுடன் இருக்குமொன்று

மற்ற குழு உறுப்பினர்கள், அவர்களுடைய வகுப்பு மாணவர் கண்களால் பார்த்து வர்ணிக்கப்பட்ட பொருளையோ உடற்பாகத்தையோ ஊகித்துக் கண்டுபிடிப்பதற்கு இந்த வாக்கியத்தை உதவிக்குறிப்பாகப் பயன்படுத்துவார்கள்.

© Singapore Zoo 2020



© Singapore Zoo 2020 

# கற்றல் பயணத்தின்போது மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்



## பாடத்திற்கான யோசனை 4: உற்று நோக்குதல்

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 3**

**திறன்கள்: • மொழி • கூர்ந்து கவனித்தல் மற்றும் வர்ணித்தல்**

### மூன்று கேள்விகள்

மூன்று கேள்விகளை உள்ளடக்கிய விளையாட்டை மாணவர்களை கண்காட்சியில் விளையாடவைக்கவும். சிறிய குழுக்களில், ஒருவர் பின் ஒருவராக கண்காட்சியில் நேரடியாகவோ அல்லது புகைப்படத்தின் வழியாகவோ அவர்கள் காணும் ஒரு பொருளை நினைவில் வைத்துக்கொள்ளச் சொல்லுங்கள்.

மர்மப் பொருள் என்ன என்பதை ஊகிக்க அவர்களுக்கு உதவும் 'ஆம்' அல்லது 'இல்லை' என்ற பதில்களை மட்டுமே கொடுக்கும் கேள்விகளை, மற்ற குழு உறுப்பினர்களைக் கேட்க சொல்லுங்கள்.

மாணவர்கள் கேட்க ஊக்குவிக்கபடும் கேள்வி வகைகள்:

- அது உயிருள்ள பொருளா?
- அது பச்சை நிறத்தில் காணப்படுமா?
- அது நீளமாக இருக்குமா?

© Singapore Zoo 2020



© Singapore Zoo 2020

# ஆசியாவின் யானை



## பாடத்திற்கான யோசனை 1: உடல் இயந்திரம்

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 1 - 2**
**திறன்கள்: • கூர்ந்து கவனிக்கும் திறன் • புத்தாக்கமான விதத்தில் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளுதல்**

- யானைக் கண்காட்சியிலோ, யானையின் புகைப்படத்தின் உதவியுடனோ, 'உடல் இயந்திரம்' எனும் விளையாட்டை விளையாட உங்களுடைய மாணவர்களை ஊக்குவியுங்கள்.

- ஐவர் அடங்கிய குழுக்களில், தங்களுடைய உடல்களைக் கொண்டு மாணவர்கள் ஒரு யானையை உருவாக்கவேண்டும். ஒவ்வொரு மாணவரும் யானையின் வெவ்வெறு உடற்பாகங்களை பாவனை செய்து காட்டுவர். அதன் பின்னர், அனைவரும் ஒன்றாக இணைந்து இரண்டு மீட்டர் தூரத்திற்கு ஒரு குழுவாக நகர்வார்கள்.

- குழுவாக, ஒரு யானையாக அவர்கள் நகரும்போது, பின்வரும் பாடலை மாணவர்கள் பாடும்படி நீங்கள் கூறலாம்.

*ஐந்து குட்டி யானைகள் ஒரே வரிசையில்*

*தும்பிக்கைகளை அங்கும் இங்கும் அசைத்தன*

*பெரிய காதுகளை (முன்னும் பின்னும்) வீசி வணக்கம் கூறின*

*தோம் தோம் தக்கிட்ட தோம் தக்கிட்ட ___*

*அம்மா கூப்பிடுறாங்க நான் போகனும்*

*மீண்டும் சந்திப்போம்*

© Singapore Zoo 2020

# கற்றல் பயணத்தின்போது மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்



## பாடத்திற்கான யோசனை 2: பார்-நினை-சிந்தி

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 1 - 3**

**திறன்கள்: • கூர்ந்து கவனித்தல் • ஆழமாக சிந்தித்தல்**

யானைகளைக் கூர்ந்து கவனிக்க கண்காட்சியை அல்லது காணொளியின் துணையைப் பயன்படுத்த மாணவர்களை ஊக்குவியுங்கள்.

பார்-நினை-சிந்தி என்ற சிந்தனை வழக்கத்தை, சிந்தனையைத் தூண்டும் பரிந்துரைக்கப்பட்ட இக்கேள்விகளின் வழி உங்களுடைய மாணவர்களுடன் பயிற்சி செய்யுங்கள்:

### பார்:

- யானையின் அனைத்து உடற்பாகங்களின் பெயர்களையும் கூறவும்
- அந்த யானையை நீங்கள் எவ்வாறு வர்ணிப்பீர்கள்? ஒரு வகுப்பாக, நாம் பத்து சொற்களைச் சேர்ந்து பட்டியலிடலாம்.
- என்னால் ____ஐ பார்க்கமுடிகின்றது

### நினை

- பெரிய காதுகளைக் கொண்டிருப்பது யானைக்கு எவ்வாறு உதவியாக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்?
- அவை ஏன் தமது காதுகளை அசைக்கின்றன என்று நினைக்கிறீர்கள்?

### சிந்தி

- யானைகள் அவற்றின் தும்பிக்கையை எதற்காக பயன்படுத்துகின்றன என்று நான் சிந்திக்கிறேன்
- யானைகளால் அவற்றின் தும்பிக்கையின் மீது நிற்கமுடியுமா என்று நான் சிந்திக்கிறேன்
- யானைகள் அவற்றின் காதுகளை அசைப்பதன் வழியாக பறக்க முடியுமா என்று நான் சிந்திக்கிறேன்

© Singapore Zoo 2020

# கற்றல் பயணத்தின்போது மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்

## பாடத்திற்கான யோசனை 3: உறைந்துபோன' படம்



**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 1 - 2**
**திறன்கள்: • கூர்ந்து கவனிக்கும் திறன் • புத்தாக்கமான விதத்தில் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளுதல்**

- யானைக் கண்காட்சியில் நேரடியாகவோ அல்லது கண்காட்சியின் புகைப்படத்தின் துணையுடனோ பார்த்தவற்றை மாணவர்கள் 'உறைந்துபோன' படமாக உருவாக்க மாணவர்களை ஊக்குவியுங்கள்.

- மரங்கள், யானைகள், யானைப்பாகர்கள் ஆகியவர்களாக மாணவர்கள் 'உறைந்து'போக முடிவெடுக்கலாம். மற்ற மாணவர்கள் அவர்கள் தேர்ந்தெடுத்தப் பொருளை அல்லது நபரை என்னவென்று ஊகித்து அடையாளம் காணவேண்டும்.

- யானைக் கண்காட்சியில் எவையெல்லாம் உள்ளன என்பதைப் பட்டியலிட்டு, அவை அனைத்தும் கண்காட்சிக்கு ஏன் தேவைப்படுகின்றன என்பது குறித்து கலந்துரையாட மாணவர்களுக்கு ஊக்கமளியுங்கள்.
  - பெரிய இடம்
  - நீந்துவதற்கும் உடல் வெப்பத்தைத் தணிப்பதற்கும் தேவைப்படும் தண்ணீர்
  - உணவு
  - நிழல்

© Singapore Zoo 2020



© Singapore Zoo 2020

## கற்றல் பயணத்தின்போது மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்

# புலி



### பாடத்திற்கான யோசனை 1: புலிப் பேச்சு

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 1 - 2**
**திறன்கள்: • கூர்ந்து கவனிக்கும் திறன் • புத்தாக்கமான விதத்தில் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளுதல்**

- இக்கண்காட்சியில் உள்ள புலிகளை கூர்ந்து கவனிக்க, அல்லது இக்காணொளியை பார்க்க உங்களுடைய வகுப்பு மாணவர்களுக்கு ஊக்கமளியுங்கள்.
- புலியையும், அது அசையும் விதத்தையும் விவரிக்க மாணவர்களை ஊக்குவியுங்கள்.

பரிந்துரைக்கப்பட்ட சிந்தனையைத் தூண்டும் கேள்விகள்

- புலி என்ன செய்கிறது?
- புலி எவ்வாறு அசைகிறது?
- புலி, அடுத்து என்ன செய்யும் என்று நினைக்கிறீர்கள்?

- கண்காட்சியில் உள்ள இரண்டு சகோதரப் புலிகளுக்கு நடுவே இடம்பெறும் கற்பனையான உரையாடல் ஒன்றை மாணவர்களை உருவாக்கச் சொல்லுங்கள். வகுப்பின் முன்னராக அந்த உரையாடலை அவர்கள் படைக்கும்போது, மாணவர்கள் புலி சகோதரர்களாக பாத்திரத்தை ஏற்று உரையாடலை அனைவரின் முன்பாகவும் படைத்துக் காட்டலாம்.

பரிந்துரைக்கப்பட்ட சிந்தனையைத் தூண்டும் கேள்விகள்

- புலிகள் ஒன்றிடம் ஒன்று என்ன சொல்லிக்கொள்ளும் என்று நினைக்கிறீர்கள்?
- நீங்கள் ஒரு புலியாக இருந்தால், உங்களுடைய சகோதரியிடமோ அல்லது சகோதரரிடமோ என்ன சொல்வீர்கள்?
- நீங்கள் ஒரு புலியாக இருந்தால், கண்காட்சிக்கு வருவோரிடம் என்ன சொல்வீர்கள்?

© Singapore Zoo 2020



## பாடத்திற்கான யோசனை 2: புலி கதாபாத்திரம் ஒன்றை உருவாக்குதல்

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 3**
**திறன்கள்: • புத்தாக்கமான விதத்தில் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளுதல்**

- கண்காட்சியில் உள்ள புலியை நேரடியாகவோ, புகைப்படத்தின் துணையுடனோ கூர்ந்து கவனிக்க மாணவர்களுக்கு ஊக்கமளியுங்கள்.

- புலி ஒன்றை வரைந்து, ஒரு கதைக்கான கதாபாத்திரத்தை உருவாக்குமாறு மாணவர்களிடம் கூறுங்கள். ஒரு கதாபாத்திரத்தை வடிவமைக்க மாணவர்களுக்கு உதவ இந்த கேள்விகளைப் பயன்படுத்துங்கள்:
  – உங்களுடைய புலியின் பெயர் என்ன?
  – உங்களுடைய புலி எத்தகைய குணநலன்களைக் கொண்டுள்ளது?
  – எது உங்கள் புலியை மற்ற புலிகளிடமிருந்து தனித்துக் காட்டுகிறது?

- மாணவர்கள் ஒரு கதையை உருவாக்க உதவ, இந்த கேள்விகளைப் பயன்படுத்துங்கள்
  – உங்கள் புலி தீர்க்கவேண்டிய, ஒரு சிறிய பிரச்சனை என்ன?
  – உங்களுடைய புலி, அப்பிரச்சனையை எவ்வாறு தீர்க்கின்றது?
  – உங்களுடைய குட்டிக்கதைக்கு என்ன தலைப்பு பொருத்தமாக இருக்கும்?

- மாணவர்கள், இருவர் அடங்கிய குழுக்களில் செயலாற்றி புலியை உள்ளடக்கிய ஒரு குட்டிக்கதையை உருவாக்கச் சொல்லுங்கள். வாய்மொழியாக அக்கதையை மாணவர்கள் பகிர்ந்துகொள்ளவும் சொல்லுங்கள்.

© Singapore Zoo 2020



# கற்றல் பயணத்தின்போது மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்



## பாடத்திற்கான யோசனை 3: உதிரிப்பாகங்களைக் கொண்ட விளையாட்டு

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 1 - 3**
**திறன்கள்: • வெவ்வேறு பொருட்களை அடையாளம் கண்டுகொண்டு வேறுபடுத்தும் திறன் நண்பர்களை விமர்சனம் செய்தல் • புத்தாக்கமான முறையில் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளுதல்**

- கண்காட்சியைச் சுற்றியுள்ள தரையிலிருந்தோ, அல்லது உங்களுடைய பள்ளிப் பூங்காவிலிருந்தோ, காய்ந்த இலைகள், குச்சிகள், கூழாங்கற்கள், பூக்கள் ஆகிய இயற்கையான பொருட்களை சிறிய குழுக்களில் மாணவர்களை எடுத்து வரச் சொல்லுங்கள்.

- கண்காட்சியில் உள்ள புலியின் உருவத்தை நேரடியாகவோ, அல்லது புகைப்படத்தின் துணைக்கொண்டு உருவாக்கவோ மாணவர்களுக்கு ஊக்கமளியுங்கள். 'புலி' என்ற சொல்லை தமிழில் உருவாக்கும் சவாலையும் நீங்கள் மாணவர்களுக்கு அளிக்கலாம். எவ்வளவு புத்தாக்கச் சிந்தனையுடன் செயல்பட முடியுமோ அவ்வாறு செயல்பட அவர்களுக்கு ஊக்கம் அளியுங்கள்.

- மாணவர்கள் உருவாக்கியதை குறைந்தது மூன்று முக்கிய அம்சங்களுடன் வகுப்பின் முன்னராக அனைவரிடமும் பகிர்ந்து படைக்கச் சொல்லுங்கள். படைக்கப்படும் உருவாக்கத்தில் தங்களுக்கு எது பிடித்திருந்தது என்பது குறித்து குழுக்கள் ஒன்றன் பின் ஒன்றாக தங்களுடைய கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளலாம்.

© Singapore Zoo 2020



# கற்றல் பயணத்திற்கு பின்னர் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்




## பாடத்திற்கான யோசனை 2: புலி வடிவில் இருக்கும் முகமூடியை வர்ணம் தீட்டுதல்

**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 1 - 2**

**திறன்கள்:** • புத்தாக்கமான முறையில் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளுதல்

- மாணவர்கள் இருவர் அடங்கிய குழுக்களாக பிரித்துவிடுங்கள். கண்காட்சியிலோ, புகைப்படத்திலோ உள்ள புலியின் வரிக்கோடுகளை மாணவர்கள் கூர்ந்து கவனிக்கும்படி ஊக்குவியுங்கள்.

- புலியின் முகத்தில் காணப்படும் மூக்கு, கன்னத்தில் இருக்கும் மீசை மற்றும் வரிக்கோடுகள் ஆகியவற்றை துணியாலான முகக் கவசத்தின் மீது ஒவ்வொரு மாணவரையும் வர்ணம் தீட்ட வையுங்கள்.



- தங்களுடைய குழு உறுப்பினருடன் ஒரு சிறிய உரையாடலை உருவாக்கி, இரண்டு புலிகளைக் கொண்ட அவர்களுடைய சொந்த கதையை நாடக வடிவமாக்க மாணவர்களை ஊக்குவியுங்கள்.

© Singapore Zoo 2020



# கற்றல் பயணத்திற்கு பின்னர் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்



## பாடத்திற்கான யோசனை 2: யானைகளை வைத்து கதை உருவாக்குதல்





**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 1 - 2**

**திறன்கள்: • பேசுதல் • சொல்வளத்தைப் பெருக்குதல்**

- இரண்டு அல்லது மூன்று யானைகள் வெவ்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதைக் காட்டும் புகைப்படங்களை கூர்ந்து கவனிக்க உங்களுடைய மாணவர்களை ஊக்குவியுங்கள்.


- ஒரு வகுப்பாக இணைந்து, ஒவ்வொரு புகைப்படத்திற்கும் ஒரு சொல்வங்கியை உருவாக்குங்கள். யானைகளை வர்ணிக்க மாணவர்களுக்கு தெரிந்த அளவிற்கு பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், பெயரடைகள் என அனைத்தையும் பகிர்ந்துகொள்ள சொல்லுங்கள்.

- அவர்களுடைய கதைகளில் உதவிச்சொற்களாக பயன்படுத்த, இச்சொற்களை எழுதி வையுங்கள். இச்சொற்களை வைத்து வாய்மொழியாக ஒரு கதையை உருவாக்க வயதில் குறைந்த மாணவர்களை ஊக்குவியுங்கள். வயதில் மூத்த மாணவர்களை தங்களுடைய கதைகளை எழுத வையுங்கள்.


- கதைகளுக்கு நீங்கள் பயன்படுத்தக்கூடிய சில தொடக்க வரிகள்:
  - விலங்கியல் தோட்டத்தில் வாழ்ந்த ஒரு யானைக் கூட்டத்திற்கு ____ மிக விருப்பம்.
  - விலங்கியல் தோட்டத்தில் அன்று மிகவும் வெப்பமான நாளாக இருந்தது. எனவே, யானைகள்...

© Singapore Zoo 2020





© Singapore Zoo 2020






# கற்றல் பயணத்திற்கு பின்னர் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்



## பாடத்திற்கான யோசனை 3: உங்களுடைய சொந்த விலங்கு கண்காட்சியை வடிவமையுங்கள்





**பரிந்துரைக்கப்படும் நிலை: தொடக்க நிலை 1 - 2**
**திறன்கள்: • பேசுதல் • சொல்வளத்தைப் பெருக்குதல்**

- நால்வர் அல்லது ஐவர் அடங்கிய குழுக்களில் மாணவர்களை இணைந்து செயல்பட வையுங்கள். அவர்களின் தொடக்கநிலை 1-2 வீட்டிலிருந்தோ, பள்ளித் தோட்டத்திலிருந்தோ, மறுசுழற்சி செய்யப்பட்ட அல்லது இயற்கையான பொருட்களை சேகரித்து வரச் சொல்லுங்கள். தரையிலிருந்து எடுக்கும்போது, இயற்கையான பொருட்களை மட்டுமே எடுக்குமாறு அவர்களுக்கு நினைவுப்படுத்துங்கள்.

  **பரிந்துரைக்கப்பட்ட பொருட்கள்;** மெல்லிழைத்தாள் பெட்டிகள், சுத்தமான தண்ணீர்ப்புட்டிகள், கழிப்பறையில் பயன்படும் மெல்லிழைத்தாள் சுருள்கள், காய்ந்த இலைகள் மற்றும் சருகுகள்

- விலங்கியல் தோட்டத்திற்கு அவர்கள் மேற்கொண்ட பயணத்தின் அடிப்படையிலோ, அவர்கள் பார்த்த விலங்கு காணொளிகளின் அடிப்படையிலோ, மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களை வைத்து, ஒவ்வொரு குழுவையும் ஒரு விலங்கு கண்காட்சியை மறுஉருவாக்கம் செய்யுமாறு கூறுங்கள்.

- அவர்கள் உருவாக்கியவற்றை வகுப்பின் முன்னர் படைத்துக்காட்ட மாணவர்களை அழையுங்கள்.

© Singapore Zoo 2020

# பின்னிணைப்பு A:

## கண்பார்வை இல்லாதவர்கள் மற்றும் யானையின் கதை:

ஓர் ஊரில், ஆறு கண்பார்வை இல்லாதவர்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் நெருங்கிய நண்பர்கள். அவர்களின் அரசர், ஒரு யானையை வாங்கியதாக கேள்விப்பட்டார்கள். உடனே, யானையைக் கட்டிவைத்திருந்த இடத்திற்குச் சென்று, யானையைத் தொட்டுப் பார்த்தார்கள்.

முதல் நண்பன் யானையின் காதைத் தடவிப் பார்த்து "ஆ! யானை முறம் போல் இருக்கிறது!" என்றான்.

இரண்டாவது நண்பன் யானையின் வாலைத் தொட்டுப் பார்த்து "ஆ! யானை கயிறு போல் இருக்கிறது!" என்றான்.

மூன்றாவது நண்பன் யானையின் காலைத் தொட்டுப் பார்த்து "ஆ!யானை மரம் போல் இருக்கிறது!" என்றான்.

நான்காவது நண்பன் யானையின் தும்பிக்கையைத் தொட்டுப் பார்த்து "ஆ! யானை பாம்பு போல் இருக்கிறது!" என்றான்.

ஐந்தாவது நண்பன் யானையின் தந்தத்தைத் தொட்டுப் பார்த்து "ஆ!யானை ஈட்டி போல் இருக்கிறது!" என்றான்.

ஆறாவது நண்பன் யானையின் உடம்பைத் தொட்டுப் பார்த்து "ஆ! யானை சுவரைப் போல் இருக்கிறது!" என்றான்.

ஒவ்வொருவரும் தாங்கள் சொன்னதுதான் சரி என்று சொல்லி சண்டை போட ஆரம்பித்தார்கள். இவர்களின் சண்டையைக் கண்ட ஒருவர் அவர்களிடம் நடந்ததைக் கேட்டார். ஆறு பேரும் தங்களுடைய யானை அடையாளத்தைச் சொல்ல, அவர் அதைக் கேட்டு சிரித்தார். அதன் பிறகு, " நீங்கள் ஆறு பேர் சொல்வதும் சரி!" என்று கூறினார்.

"எப்படி?" என்று ஒரே குரலில் அனைவரும் கேட்டார்கள்.

அதற்கு அவர், "முறம் போல் இருப்பது யானையின் காது, கயிறு போல் இருப்பது யானையின் வால், மரம் போல் இருப்பது யானையின் கால், பாம்பு போல் இருப்பது யானையின் தும்பிக்கை, ஈட்டி போல் இருப்பது யானையின் தந்தம், சுவர் போல் இருப்பது யானையின் உடம்பு! அதனால்தான் நீங்கள் சொன்னது எல்லாம் சரி என்று நான் சொன்னேன்!" என்று விளக்கினார்.

"இப்படித்தான், நாம் நம் அனுபவத்தை வைத்து மட்டுமே முடிவெடுக்கிறோம். நாம் நினைப்பது மட்டுமே முழு உண்மையாக இருக்காது. ஒவ்வொருவர் கூறுவதிலும் ஓர் உண்மை இருக்கலாம் என்பதையும் உணரவேண்டும். " என்று கூறி நகர்ந்தார்.

© Singapore Zoo 2020